# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் நவம்பர் 2018 மாதம் 30–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திரு,ம,அருண்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொறுப்பு)**
**கூட்ட பொருள்கள்**

| |
|---|
| **பொருள் எண்–01** |
| கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் (SBM) கீழ் பொது மக்களிடம் வீடுவீடாக சென்று சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்கும் பணி நகராட்சிக்கு சொந்தமான 12 இடங்களில் (onsite compost) குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரமாக்குதல் மற்றும் மூன்று இடங்களில் நுண் உரக்களம் உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக நகராட்சி அலுவலகத்தின் உள்பகுதியில் நுண் உரக்களம் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இங்கு தரம் பிரித்து சேகரமாகும் குப்பைகளை உரமாக்க பயன்படுத்த ஏதுவாக EM சொலுஷன் லிட்டர் பணியின் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்ய இதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 3062/2018/அ4 |
| பொருள் எண் 02 |
| மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுரைகளின்படி தமிழ்நாட்டில் டெங்கு, பன்றிக்காய்ச்சல் அதிகமாக பரவி வருவதால் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC) கொண்டு கொசுப்புழுக்களை அழித்திட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க பணி நடைபெற்று வருகிறது. மேலும் நகராட்சி பகுதியிலுள்ள மொத்த வீடுகள் கணக்கீடு செய்து கழிவுநீர் தேக்க தொட்டியின் (செப்டிக் டேங்க்) உருவாகும் கொசுக்கள் காற்று வெளியேறும் குழாயிலிருந்து (Airval) வெளியேறுவதை கட்டுப்படுத்தும் பணிக்கு கொசுவலையை கட்ட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கழிவுநீர் தொட்டியின் காற்று போக்கிகளில் கொசுவலை பொருத்தி கொசுவினால் பரவும் நோய்கள் கட்டுபடுத்த வேண்டி சுமார் 15000 வீடுகளுக்கு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும், பொது மக்களின் நலன் கருதியும் 15000 கொசு வலையை வாங்கி பயன்படுத்த இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 3061/2018/அ4) |
| பொருள் எண் – 03 |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொது சுகாதார வாகனத்தின் மூலம் குப்பைகள் சேகரம் செய்து மக்கு உரத்திடலுக்கு எடுத்து செல்லப்படுகிறது. அவ்வாறு எடுத்து செல்லப்படும் குப்பைகளை மேற்புறம் வலை ஏதும் இல்லாமல் அப்படியே கொண்டு செல்வதால் குப்பைகள் காற்றின் மூலம் பறந்து செல்வதால் பொதுமக்களுக்கும் மற்றும் வாகன ஓட்டிகளுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதியு. பொது சுகாதார அவசிய அவசியம் கருதி இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் 5 வாகனங்களுக்கு |

வாகனம் 1க்கு 2 வலைகள் வீதம் கொள்முதல் செய்ய இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருநது மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 3063/2018/அ4)

பொருள் எண் 04

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் திறந்தவெளியில் மலம் கழிப்பதனை முற்றிலும் அகற்றிட இந்நகர்மன்ற தீர்மானம் எண் 1150 நாள் 30.10.2015ல் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிவறை கட்டும் பணிகள் மேற்கொள்ள இந்நகர பகுதியில் கள ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பயனாளிகள் கணக்கீடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 644 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அதனடிப்படையில் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினத் தொகையாக மத்திய அரசு பங்குத்தொகை ரூ.25,76,000/–ம், மாநில அரசு பங்கு தொகையாக ரூ.12,88,000/– ஆக மொத்தம் தொகை ரூ.51,52,000/– பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படி இந்நகரராட்சி பகுதியில் கழிப்பறைகள் இல்லாத வீடுகளை மறு சீராய்வு செய்து, அதனடிப்படையில் விடுபட்டுள்ள பயனாளிகள் தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் கழிப்பறைகள் இல்லாத வீடுகளை மறு சீராய்வு செய்யப்பட்டதில், தற்போது 971 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதனை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பயனாளிகளுக்கு உடனடியாக தனிநபர் கழிவறைகள் கட்டுவதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் பல்வேறு தேதிய ஆய்வுக் கூட்ட அறிவுரைகளுக்கிணங்க, இந்நகராட்சி பகுதியில் மறு சீராய்வில் கணக்கெடுப்பு செய்யப்பட்ட 971 பயனாளிகளுக்கும், தனி நபர் கழிவறைகள் கட்டுவதற்கு இந்நகராட்சி ஒப்பந்ததாரர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் பயனாளிகள் மூலமாக பணியினை மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட 971 பயனாளிகளுக்கும் தனிநபர் கழிவறைகள் கட்டுவதற்கான செலவின தொகைக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க..ண் 9884/2018/பி1 நாள் 13.06.2018ல் மத்திய அரசு பங்கு தொகை ரூ.38,84,000/– மாநில அரசு பங்கு தொகை ரூ. 19,42,000/– ஆக மொத்தம் தொகை ரூ.58,26,000/– தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்தியா திட்ட வங்கி கணக்கில் செலுத்திடவும், மேற்கண்ட பணிகள் மேற்கொண்டுள்ள ஒப்பந்ததாரர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மக்கள் பயனாளிகளுக்கு தொகையை அவ்வப்போது வழங்கிடவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மறு சீராய்வு செய்யப்பட்ட 971 பயனாளிகளுக்கும் தனிநபர் கழிவறைகள் ஒப்பந்ததாரர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பயனாளிகளின் மூலமாக மேற்கொள்ள பணி உத்தரவு மற்றும் அதற்கான தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டும் பணி (மத்திய, மாநில அரசு மற்றும் நகராட்சி பங்கு தொகை) கணக்கிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2091/2015/அ4)

பொருள் எண் 05

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, விசைப்பம்புகள், சிறுமின் விசைப்பம்புகள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்புகளில் ஏற்படும் அனைத்து பழுதுகளையும், உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும், இதற்காக 2018-2019 ஆம் ஆண்டிற்கு ஏற்கனவே, தீர்மானம் எண். 216 நாள். 28.03.2018ல் ரூ. 9.95 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணி முடிவுறும் தருவாயில் உள்ளதால், தற்போது மேற்காணும் வார்டுகளில் உள்ள விசைப்பம்புகள், சிறுமின் விசைப்பம்புகள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்புகளை பழுது நீக்கம் செய்வதற்கு தயார் செய்யப்பப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| |
|---|
| **<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் விநியோக அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 3713 / 2018 / இ1)** |
| பொருள் எண்—06 |
| கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடியில் கட்டப்பட்டுள்ள அம்மா உணவகத்தினை செயல்படுத்தத் தேவையான அரிசி வகைகள், மளிகைப் பொருட்கள், காய்கறி வகைகள், பால், சமையல் எரிவாயு இணைப்பு, விற்பனை ரசீது புத்தகங்கள், பணிபுரியும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் தேவைப்படும் அனைத்தையும் வாங்கிட இந்நகர்மன்ற தீர்மான எண் 814 நாள் 30.09.2014ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>தற்போது 2018—2019 ஏப்ரல் முதல் அக்டோபர் வரை ரூ.22.00 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டதையும் இனிவரும் காலங்களான நவம்பர் 2018 முதல் மார்ச் 2019 வரையில் ஆகும் உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கும் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஏப்ரல் 2018 முதல் அக்டோபர் 2018 வரை ரூ.22.00 இலட்சத்திற்கு செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 2218/2018/எச்1) |
| பொருள் எண்—07 |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித மூ.மு.எண் 25032/2018/பி3 நாள் 24.10.2018ன்படி 124 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் 124 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும், செய்தித் தாளில் விளம்பரம் செய்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/— வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண் 2456/2018/எச்1) |
| பொருள் எண்—08 |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தர சான்று பெற கோரப்பட்டதில் தாளார் பல்கலை கழகம் பொறியியல் கல்லூரி திண்டிவனம் அவர்களின் கடித எண் 34/PCW/2018 நாள் 29.10.2018 தேதிய கடிதத்தில் தர சான்று வழங்க ரூ.55000/— மற்றும் சேவை வரியுடன் சேர்த்து தொகையாக செலுத்த கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் /2018/எச்1) |
| பொருள் எண்—09 |
| மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் கடித எண் 86/செ.ம.தொ.2018/ நாள் 07.09.2018ம் தேதிய கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் வழியாக தமிழக அரசு குறித்த இரண்டாண்டு சாதனை மலர் குறித்து விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியிலிருந்து இரண்டாண்டு சாதனை மலர் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.<br>மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் கடித எண் 93/செ.ம.தொ. 2018 நாள் 05.10.2018ன்படி தமிழக அரசு குறித்த திட்டப்பணிகள் குறித்து தொழில் மலரில் விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. |

அதன்படி இந்நகராட்சி வழியே இரண்டாண்டு சாதனை மலர் மற்றும் தொழில் மலரில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி உரிய நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | மக்கள் குரல் | CHEMAB 080904090 26.10.18 | 15750 |
| 2 | தினத்தந்தி | CDL11819-0007649 17.10.18 | 35078 |
| 3 | எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன் | VPMTN 90015220 18.10.18 | 18900 |
| 4 | தினமலர் | VMG0097 18.10.18 | 19950 |
| 5 | தினகரன் (தமிழ்முரசு) | 3300112511 17.10.18 | 10500 |
| 6 | தினகரன் | 3300114072 17.10.18 | 30001 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற பட்டியல் தொகைகள் வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் /2018/இ1)

பொருள் எண்–10

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12 முதல் 21 வரை பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு விசைப்பம்புகள், சிறுமின் விசைப்பம்புகள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்புகளில் ஏற்கனவே அனைத்து பழுதுகளையும், உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும், இதற்காக 2018–2019 ஆண்டிற்கு ஏற்கனேவ, தீர்மானம் எண் 217 நாள் 28.03.2018ல் ரூ.9.95 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. தற்போது மேற்காணும் வார்டுகளில் உள்ள விசைப்பம்புகள், சிறுமின் விசைப்பம்புகள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்புகளை பழுது நீக்கம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9,90,000/–க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1969/2018/இ1)

பொருள் எண்–11

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினை விரிவாக்கம் செய்யப்பட்டதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு நாளது தேதிவரை பட்டியல் தொகை வழங்கப்படாததால் மாலை மலர் நிறுவனத்தின் வழியே கடந்த 22.11.2018 அன்று கீழ்க்கண்ட பட்டியல்கள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விளம்பரம் செய்த நாள் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மாலைமலர் | 12.06.2018 | Cud 016060058 12.06.2018 | 24000 |
| 2 | மாலைமலர் தொழில்மலர் | | Cud018100104 17.10.18 | 33600 |
| 3 | மாலைமலர் | 07.01.18 | Cud01810040 07.01.18 | 17220 |

மேற்படி நிறுவனத்திற்கு நாளது தேதிவரை பட்டியல்தொகை வழங்கப்படாததால் மாலைமலர் நிறுவனம் கடலூர்– இடமிருந்து 22.11.2018ம் தேதி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்      /2018/இ1)

பொருள் எண்–12

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் நிதி 2018–2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 14.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு கழிவுநீர் சேகரிக்கும் தொட்டியின் காற்று குழாய்க்கு தேவையான கொசு மருந்து வலை விநியோகம் செய்தல் | ரூ.4,50,000 | M/s SHIVAM Traders, Chennai-600 095 | ரூ.29/– ஒரு எண்ணிக்கை குறைவான விலைப்புள்ளி |
| | | | M/s SHREE PLASTO TECH, Chennai | ரூ.32/– ஒரு எண்ணிக்கை அதிகமான விலைப்புள்ளி |

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு எண்ணிக்கைக்கு ரூ.29/–க்கு குறைவான ஒப்பந்தப்புளளி அளித்துள்ள “M/s SHIVAM TRADERS, Chennai-600095” என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 3061/2018/இ1)

பொருள் எண்– 13

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் நிதி 2018–2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 14.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான ஈ.எம். சொலியூசன் விநியோகம் செய்தல் | ரூ.9,80,000 | M/s SHIVAM Traders, Chennai-600 095 | ரூ.950/– ஒரு லிட்டர் குறைவான விலைப்புள்ளி |
| | | | M/s SHREE PLASTO TECH, Chennai | ரூ.1100/– ஒரு லிட்டர் அதிகமான விலைப்புள்ளி |

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு லிட்டர் ரூ.950/–க்கு குறைவான ஒப்பந்தப்புளளி அளித்துள்ள “M/s SHIVAM TRADERS, Chennai-600095” என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 3062/2018/இ1)

பொருள் எண்–14

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை, தரம் பிரித்து அப்பகுதிகளிலேயே நுண்ணுயிரி உரம் தயார் செய்வதற்கு (Onsite Composting), நுண் உரக்கள தொட்டிகள் அமைக்கப்பட்டு, அதில் மக்கும் குப்பைகளை சேகரம்

செய்யப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 08.06.2018ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில், மேற்படி குப்பை உருவாகும் இடத்தில் உரம் தயார் செய்வதற்கான தொட்டிகள் (Onsite Composting) திறந்த வெளியில் அமைந்துள்ளதால், மழைக்காலங்களில் புதியதாக கட்டப்பட்டுள்ள மக்கும் குப்பை தொட்டிடிளில் சேகரித்துள்ள கழிவுகளில் மழைநீர் தேங்கி, அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசக்கூடும் என்பதால், நுண் உரக்களத் தொட்டிகளுக்கு மேற்கூரை அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரம் தயார் செய்வதற்கு (onsite Composting) அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளுக்கு மேற்கூரை அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொக ரூ.9,50,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1468/2018/இ1)

பொருள் எண் -15

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் நிதி 2018-2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 03.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பகுதிகளில் உள்ள சிறிய அளவிலான நுண் உரக்களத்திற்கு இரும்பு கூடம் மற்றும் புதியதாக 4 நுண் உரக்கள தொட்டி அமைத்தல் | ரூ.9,50,000 | திருமதி எஸ்.பத்மா கள்ளக்குறிச்சி | 0.09% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருவாளர்கள் J.P.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கள்ளக்குறிச்சி | 3.40% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் 0.09% குறைவான ஒப்பந்தப்புளளி அளித்துள்ள "திருமதி எஸ்.பத்மா, கள்ளக்குறிச்சி" என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1468/2018/இ1)

பொருள் எண்-16

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் நிதி 2018-2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 14.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்று ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு குப்பை அள்ளும் வாகனங்களுக்கு தேவையான மூடு வலை விநியோகம் செய்தல் | ரூ.2,50,000 | M/s SHIVAM Traders, Chennai-600 095 | ரூ.2,48,000/- குறைவான விலைப்புள்ளி |
| | | | M/s SHREE PLASTO TECH, Chennai | ரூ.2,71,000/- அதிகமான விலைப்புள்ளி |

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.2,48,000/-க்கு குறைவான ஒப்பந்தப்புளளி அளித்துள்ள "M/s SHIVAM TRADERS, Chennai-600095" என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி

உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 3063/2018/இ1)

பொருள் எண்–17

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் மற்றும் குடிநீர் நிதி 2018–2019ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் விபரப்படி உள்ள பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகள் தனி அலுவலலர அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கருணாபுரம் மாரியம்மன் கோவில் தெரு, ராஜாநகர் முகப்பு, பெருமாய் கோயில் தெரு முன்பு ஆகிய பகுதிகளில் வடிகால்கள் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 925000 |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த தார்சாலைகள் தற்காலிக பழுது நீக்கம் செய்தல் | 975000 |
| 3 | நகராட்சி தினசரி நாளங்காடியில் சிமெண்ட் தளம் அமைத்தல், பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளுதல், காந்திசாலை மற்றும் ஜோதி வள்ளலார் தெரு குடிநீர் விநியோக குழாய் அமைத்தல், கச்சேரி சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் மோட்டார் அறையில் மின்சார பணிகள் மற்றும் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளுதல் | 650000 |
| 4 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதுடைந்த குடிநீர் விநியோக கேட் வால்வுகளுக்கு தொட்டிகள் அமைத்தல் | 475000 |
| 5 | வார்டு எண் 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் பழுதடைந்த சிறுமின் விசை பம்பு தொட்டிகள் பராமரிப்பு பணி செய்தல் | 500000 |
| 6 | வார்டு எண்12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் பழுதடைந்த சிறுமின் விசை பம்பு தொட்டிகள் பராமரிப்பு பணி செய்தல் | 500000 |
| 7 | துருகம் சாலை எரிவாயு தகன மேடை பராமரிப்பு மற்றும் LPG எரிவாயு அமைப்பு ஏற்படுத்துதல் | 990000 |
| 8 | ஏமப்பேர் கரியப்பாநகர் ஏரிக்கடை இறக்கத்தில் புதியதாக ஆழ்துு‘ள கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் ம்சய்தல் | 300000 |
| 9 | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நுண்உரக்கள மையத்திற்கு தேவையான தளவாட இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 990000 |

மேற்காணும் விபரப்படி உள்ள பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு தனி அலுவலா் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலா் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர, அவசியத்தினை கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டி உள்ளதால், தனி அலுவலா் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்
3. தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 3714/2018/இ1)

பொருள் எண்–18

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும் வீடுவீடாக சென்று குப்பைகள் தரம்பிரித்து பெற்று குப்பை உருவாகும் இடத்திலேயே உரமாக்குதல் (Onsite Compost) மற்றும் மூன்று இடங்களில் நுண்ணியிர் உர்மாக்குதல் மையம் (Micro Compost centre) பணி நடைபெற்று வருகியது. இதனை செயல்படுத்தி உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள பொதுமக்கள் குடியிருப்பு பகுதிகளிலில குப்பைகள் தரம் பிரித்து வழங்குதல் தொடர்பாக நகராட்சி பகதியில் உள்ள பொது மக்களுக்கு வார்டுவாரியாக மற்றும் அரசு தனியார் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஓர் கலைநிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி பொதுக்கள் தாமாகவே மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்க விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடத்தவும் மற்றும் துண்டு பிரசுரங்கள் ஆகியவை அச்சிடும் பணிகள் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினத்தில் இந்நகராட்சியின் துப்புரவு ஆய்வாளர் திரு பி.செல்வக்குமார் என்பவருக்கு ரூ.1,80,000த்தில் ரூ.1,50,000 முன்பணமாக பெற்றதையும், மீதமுள்ள ரூ.30,000ஐ வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் அவசிய, அவசரம் கருதியும், நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட முன்பணத்தினை அனுமதிக்கலாம். நிலுவையில் உள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் எச்1 / 3087 / 2018)

பொருள் எண்–19

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட் கிராம புல எண் 105/5எ, 113/6pt, 113/7pt, 113/11,12,13, 114/14, 1,2ல் அமைந்துள்ள அனுமதியற்ற சரண் கார்டன் விரிவாக்கம் மனைப்பிரிவில் உள்ள 40 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி ந.க.எண் 3413/2018/விம நாள் 23.07.2018ல் கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ.இ(வி.ம) எண் ஆர் 739/2018 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தியபின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் எப்1/2980/2018)

பொருள் எண்–20

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான குளக்கரை கடை எண் 24ஐ குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் திரு ஜே.ராஜீ த/பெ ஜெயபிரகாஷ், கள்ளக்குறிச்சி என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக மேற்படி கடையினை நடத்த இயலாத சூழ்நிலை உள்ளதாகவும், அதனை நகராட்சி வசம் ஒப்படைப்பதாகவும் கடிதம் கொடுத்துள்ளார். அன்னார் கடந்த 2017–18 வரை வாடகையினை செலுத்தி உள்ளார். மேலும் அக்கடைக்கான வைப்புத்தொகையினை திரும்ப வழங்கவும் அக்கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, அன்னாரின் கோரிக்கையினை ஏற்று மேற்படி கடை எண் 24ஐ நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளவும், நிபந்தனைகளின்படி மறு ஏலம் விட்டு வாடகை தொகையினை நிர்ணயம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. குத்தகைதாரரின் கோரிக்கையினை தனி அலுவலர் அவர்கள் ஏற்று, நகராட்சி வசம் ஒப்படைத்ததை அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் கடையினை நிபந்தனைகளுக்குட்பட்டு மறு ஏலம் விடவும் அதற்கான வாடகை தொகையினை நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3639/2012/அ3

பொருள் எண்–21

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் மற்று□ குடி□□ □னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 19.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிக்கு குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 7,00,000/- | M/s. ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 0.52 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. விநாயகா எலக்ட்ரிக்கல்ஸ் ஸ்டோர்ஸ் & டூல்ஸ், கள்ளக்குறிச்சி | 1.35 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | நகராட்சிக்கு தெருமின் விளக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 7,00,000/- | M/s. R.V. & Co., கள்ளக்குறிச்சி | 0.49 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.13 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | ஏமப்பேர் குளத்து மேட்டுத் தெரு சமுதாய கழிவறைக்கு தண்ணீர் வசதிகள் செய்தல் (வார்டு எண். 15) | ரூ. 1,50,000/- | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.03 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 4.31 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | சித்தேரி தெரு முருகன் கோவில் அருகில் உள்ள சமுதாய கழிவறைக்கு தண்ணீர் வசதிகள் செய்தல் (வார்டு எண். 20) | ரூ. 1,50,000/- | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.51 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 8.64 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | துருகம் சாலை உரத்திடலில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் | ரூ. 2,00,000/- | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.44 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. R.V. & Co., கள்ளக்குறிச்சி | 0.89 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6. | குப்பை உருவாகும் இடத்தில் உரம் தயார் செய்யும் தொட்டிக்கு கழிவுநீர் சேகரமாகும் தொட்டி அமைத்தல் மற்றும் அண்ணாநகர் கட்டபொம்மன் தெருவில் பழுதடைந்த சிமெண்ட் தளம் மற்றும் வடிகால் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 1,75,000/- | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 0.15 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.16 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 7. | நகராட்சிக்குச் சொந்தமான 6 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் அளவுமானி புதுப்பித்தல் | ரூ. 1,00,000/- | M/s. ஸ்ரீ சபரி இன்டஸ்ட்ரீஸ், ஆத்தூர் | 0.47 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ விநாயகா இன்டஸ்ட்ரீஸ், கள்ளக்குறிச்சி | 0.00 % மதிப்பீட்டு தொகைக்கு |
| 8. | வார்டு எண். 20ல் புதியதாக 2 ஆழ்துளை கிணறுகள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள 2 ஆழ்துளை கிணறுகளை தூர்நீக்கம் செய்தல் | ரூ. 3,00,000/- | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.44 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 4.66 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 9. | வார்டு எண். 14, ஏமப்பேர் சேலம் பிரதான சாலை, வார்டு எண். 21, பி.ஆர்.எஸ். நகரில் சிறுபாலம் அமைத்து நகராட்சி பகுதிகளில் உள்ள பழுதடைந்த வடிகால்களை பழுது நீக்கம் செய்தல் | ரூ. 6,50,000/- | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 0.10 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.29 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 10. | நகராட்சி அலுவலக சுத்திகரிப்பு இயந்திரம் பழுது நீக்கம் செய்து, | ரூ. 80,000/- | M/s. வீ லைட், ஆத்தூர் | 1.35 % மதிப்பீட்டிற்கும் குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலக வளாகத்தில் எல்.இ.டி. மின் விளக்குகள் பொருத்துதல் | | M/s. ஸ்ரீ வெங்கடேஸ்வரா என்டர்பிரைசஸ், ஆத்தூர் | 0.82 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| 11. | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் (கைப்பம்புகள்) பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,90,000/- | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.30 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 4.52 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. பணிகளின் அவரச, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1969 / 2018 / இ1)**

**பொருள் எண்–22**

கள்ளக்குறிச்சி நகராட்சி 09.08.2010 முதல், முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011ன் கணக்கெடுப்பின்படி 52507 ஆகும். இந்நகராட்சி 11.69 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன், 21 வார்டுகளுடன் நிர்வகிக்கப்படுகிறது.

இந்நகராட்சியில் 14285 குடியிருப்புகளில் இருந்து தினமும் 20 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. இதில் முதன்மை நிலை குப்பை சேகரிக்கும் பணிக்கு தள்ளுவண்டிகள் 65 எண்ணிக்கைகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இந்நகராட்சியில் நுண்ணுயிரி உரமாக்குதல் மையம் (Micro Composting Center) 3 இடங்களில் ரூ. 120.00 இலட்சம் மதிப்பீட்டில், தூய்மை இந்தியா திட்டம் 2016-2017ல், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணி சிறப்பாக மேற்கொள்ள ஏதுவாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 11088-14/P3/2017 நாள். 24.05.2018ன் கீழ் 2 எண்ணிக்கை இலகுரக வாகனம் (LCV) வாங்குவதற்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 22866/P3/2018 நாள். 23.08.2018ன் கீழ் 6 எண்ணிக்கை பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (BOV) வாங்குவதற்கு, நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 20.09.2018-ந் தேதிய மின்னஞ்சலில், இந்நகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கையின் தேவையினை கணக்கீடு செய்து, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட வாகனங்களை தவிர்த்து, தற்போது கூடுதலாக கீழ்க்காணும் விவரப்படி உள்ள வாகனங்கள் வாங்குவதற்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குதல் (BOV) | 16 | 28.80 |
| 2. | இலகுரக வாகனம் வாங்குதல் (LCV) | 3 | 16.80 |
| **மொத்தம்** | | | **45.60** |

மேற்காணும் விவரப்படி உள்ள வாகனங்கள் வாங்குவதற்கு, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், ரூ. 45.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உரிய பிரேரணை அனுப்ப தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு

வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கான செலவினத்திற்கான தொகையினை அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2543 / 2018 / இ1)**

**பொருள் எண்–23**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான சேலம் நெடுஞ்சாலையில் உள்ள குளக்கரை கடைகள் 10 எண்ணிக்கையில் செயல்பட்டு வந்த நிலையில் தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி பழுது அடைந்துள்ள கடைகள் இடித்துவிட்டு புதியதாக கடைகள் கட்டிக்கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சியின் வழியே கடைகள் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு, ஏற்கனவே உள்ள 9 கடைதாரர்கள் கடைகள் ஒதுக்கீடு செய்துத்தரக் கோரி டெல்லி உச்சநீதி மன்ற வழக்கு எண். 32780 முதல் 32788 / 2011 வழக்கு தொடர்ந்து, மேற்படி வழக்கின் தீர்ப்புரையின்படி புதியதாக கட்டப்பட்ட கடைகளில் (முன்பக்கம் 13, பின்பக்கம் 13 என மொத்தம் 26 கடைகளில்) முன்பக்கம் 4 கடைகள், பின்பக்கம் 4 கடைகளுக்கு பொதுஏலம் விட்டு அதன் விபரத்தினை தெரிவிக்க உத்தரவுவிடப்பட்டது. அதன்படி 09.07.2014 அன்று பொது ஏலம் விடப்பட்டு அதன் விவரம் உச்சநீதி மன்றம் டெல்லி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 752/2014 நாள் 23.6.2014–ன்படி முன்பக்கமுள்ள 9 கடைகள், ஏற்கனவே உள்ள 9 குத்தகை கடைகளுக்கு வழக்கு தொடர்ந்த நபர்களுக்கு, 9 கடைகளுக்கு குலுக்கல் முறையில் கடைகள் வழங்க தொவிக்கப்பட்டதன் பேரில், மேற்படி கடைகளுக்கு வைப்பு தொகை ரூ.10,00,000/–ம் (ரூபாய் பத்து இலட்சம்) மாதாந்திர வாடகை தொகை, சேவை வரி மற்றும் வருமான வரி ஆகியவுடன் செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளனர். அதன் அடிப்படையில் 9 கடைதாரர்ளுக்கு கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

இந்நகராட்சி மன்ற தீர்மானம் 980/2015 நாள். 30.03.2015–ன்படி, கடந்த 15.05.2015ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கடை எண். 19க்கு மட்டும் வங்கி வரைவோலை வரப்பெற்று மீதமுள்ள கடைகளுக்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. கடை எண்கள் 14,15,16,17,18 மற்றும் 22 ஆகிய கடைகளுக்கு கீழ்கண்டவாறு பொது ஏலம் கோரப்பட்டதில் யாரும் பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள முன்வரவில்லை என்பதால் கீழ்கண்ட விவரப்படி பொது ஏலம் கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

1. 03.06.2015 பொது ஏலம் கோரியது.
2. 22.062015 பொது ஏலம் கோரியது.
3. 17.06.2016 பொது ஏலம் கோரியது.
4. 07.03.2017 பொது ஏலம் கோரியது.

வரிசை எண் 01 முதல் 04 வரை நடைப்பெற்ற ஒப்புந்தப்புள்ளியில் வைப்பு தொகை அதிகமாக இருப்பதாக பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை.

இந்நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் 28.06.2013ல் குளக்கரை கடை எண்கள் 14, 15, 16, 17, 18 மற்றும் 21 ஆகிய கடைகள் கடந்த 09.07.2014 முதல் காலியாக உள்ளதாலும், வைப்புத் தொகை ரூ.5.00,000/– இலட்சத்திலிருந்து ரூ.2.00,000/மாக (ரூபாய் இலட்சம்) குறைந்ததால். மேற்படி கடைகள் அனைத்தும் பொது ஏலத்தில் கடைகள் வாடகைக்கு எடுக்க முன் வருபவர்கள் என்ற அடிப்படையில் தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதியின் பேரில் வைப்புத் தொகைகள் கீழ்கண்டவாறு குறைவு செய்யப்பட்டது.

ரூ.5,00,000/– இலட்சத்திலிருந்து ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம்) மாக வைப்பு தொகை குறைப்பு செய்யப்பட்டது. அதன்படி இக்கடைகளுக்கு 16.11.2018 அன்று பொது ஏலம் கோரப்பட்டதால் கடை எண் 21க்கு மட்டும் இரண்டு நபர்கள் மட்டும் கலந்துக் கொண்டு வைப்பு தொகை அதிகமாக உள்ளது என தெரிவித்துள்ளனர். எனவே, இந்நகராட்சியில் கடந்த 09.07.2014 முதல் கடந்த 4 ஆண்டுகளாக கடை எண்கள் 14,15,16,17,18, 21 மற்றும் 22 ஆகிய 7 கடைகளுக்கு சராசரியாக மாதாந்திர வாடகை தொகை ரூ.10500X12X7 = 8,82,000 வீதம் கீழ்கண்ட விவரப்படி, இந்நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதால், மேற்படி கடைகளில் உள்ள வைப்பு தொகை ரூ.2,00,000/– இலட்சத்திலிருந்து

ரூ1,00,000/—மாக வைப்பு தொகையினை குறைத்து வைப்பு தொகை நிர்ணயம் செய்யலாம். அவ்வாறு வைப்பு தொகை குறைத்து நிர்ணயம் செய்தால் காலியாக உள்ள 7 கடைகள் மற்றும் 24 எண் கொண்ட கடையை திரு. ஜே. ராஜு, த/பெ. ஜெயபிரகாஷ், 9. சித்தேரி தெரு, கள்ளக்குறிச்சி அவர்களுக்கு 01.04.2018 முதல் கடைகளை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட கடையும் சேர்த்து 8 கடைகள் பொது மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தால், இனி வரும் காலங்களில் ஆண்டுக்கு ரூ.10,36,000/— சராசரியாக ஆண்டுக்கு வாடகை தொகையாக கூடுதலாக நகராட்சிக்கு வருவாய் உயர்வு கிடைக்கும் என்பதால் வைப்பு தொகையினை குறைக்க ஆணையாளர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிக்கும் பொருட்டு வைப்பு தொகையினை குறைக்க மன்றம் முடிவு செய்யலாம்

**(ந.க.எண். 3069 / 2017 / சி1)**

**பொருள் எண்—24**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில், பேருந்துகள் வெளியே செல்லும் வழியில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான மின் கம்பம் பேருந்து நிலையத்திலிருந்து வெளியே செல்வதற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளதை, மாற்றி அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு 05.07.2018ல் கடிதம் அனுப்பப்பட்டதில், உதவி பொறியாளர், நகரம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கள்ளக்குறிச்சி அவர்களின் கேட்பு பட்டியல் எண். AE / JE / O&M / F.App.Tracking / D.No. 195/2018 நாள். 27.08.2018ல், மேற்காணும் மின் கம்பத்தினை மாற்றி அமைக்க தொகை ரூ. 56,940/-ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் தொகை ரூ. 56,940/- (ரூபாய் ஐம்பத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்துவதற்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

3. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
4. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3022 / 2017 / இ1)**

**பொருள் எண்—25**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் □னி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 30.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நுண்உரக்கள மையத்திற்கு தேவையான இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,90,000/- | M/s. TOTALS ENVIRONMENT SOLUTIONS, Erode-638001 | 0.20 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. CARVIN DINKUM ENGINEERING (P) LTD., Chennai-600058 | 3.19 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், **0.20%** மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **"M/s. TOTALS ENVIRONMENT SOLUTIONS, Erode-638001"** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை, திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3714 / 2018 / இ1)**

**பொருள் எண்–26**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-2019ன் கீழ், கீழ்க்காணும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 22866/P3/2018 நாள். 23.08.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு இந்நகராட்சியில் 19.09.2018 ஆம் தேதியன்று மின்னனு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்காணும் பட்டியலின்படி வரிசை எண். 01ல் காணும் **M/s. NEPTUNE AUTOMATION,** Erode-638012 என்ற நிறுவனத்தார் மட்டுமே தொழில் நுட்ப அறிக்கையில் தகுதி பெற்றுள்ளார். வரிசை எண். 02, 03 மற்றும் 04ல் காணும் ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப அறிக்கையில் தகுதி பெறாமல் உள்ளனர். எனவே, தொழில்நுட்ப அறிக்கையில் தகுதி பெற்றுள்ள **M/s. NEPTUNE AUTOMATION,** Erode-638012 என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகித உறையினை 04.10.2018 அன்று திறந்து பரிசீலிக்கப்பட்டதில், மதிப்பீட்டைவிட 1.39% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். அதன் விவரம் கீழ்வருமாறு.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **தொழில்நுட்ப தகுதி** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு Battery Operated Vehicle - 6 எண்ணிக்கை சப்ளை செய்யும் பணி | ரூ. 10.80 | **M/s. NEPTUNE AUTOMATION,**<br>254, Arunachala Gounder Thottam,<br>Veerapanpalayam,<br>Erode-638012 | **தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டுள்ளது** | **1.39 %**<br>**மதிப்பீட்டிற்கும் குறைவு** |
| | | | **M/s. PRIYAM INDUSTRIES AND ENGINEERING PVT LTD.,**<br>No. 625, Surya Complex,<br>2nd Floor, Annasalai,<br>Chennai-600006 | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை | -- |
| | | | **M/s. ARUN INDIAN MOTORS,**<br>5, Gandhi Road,<br>Salem-63600 | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை | -- |
| | | | **M/s. VATSALA ASSOCIATES,**<br>Sree Devi Nivas, 62,<br>Om Sakthi Nagar,<br>Ramanathapuram,<br>Coimbatore-641045 | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை | -- |

எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு மதிப்பீட்டைவிட **1.39%**-க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, "**M/s. NEPTUNE AUTOMATION,** Erode-638012" என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. "**M/s. NEPTUNE AUTOMATION,** Erode-638012" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டைவிட **1.39%**-க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2220 / 2018 / இ1)**

**பொருள் எண்–27**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள், பேனல் போர்டுகள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, இந்நகராட்சி தீர்மானம் எண்.

296/2018 நாள். 20.09.2018ல் ரூ. 7.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 0.52% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, திருவாளர்கள். ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கி, உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் பணியில் கொள்முதல் செய்யப்பட்ட உபகரணங்கள் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், இந்நகரப் பகுதிகளில் தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி சரியான முறையில் குடிநீர் வரப்பெறவில்லை. இதனால் நகராட்சி பகுதிகளிலுள்ள சிறுமின் விசைப்பம்புகளின் மூலமாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும், தற்போது நிலவும் கடும் வறட்சியின் காரணமாக, ஆழ்துளை கிணற்றின் நீர்மட்டம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருவதால், சிறுமின் விசைப்பம்புகள் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளின் குடிநீர் குழாய்கள் மற்றும் அதற்கான இதர உபகரணங்களை கூடுதலாக இறக்கி குடிநீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்த்திடும் பொருட்டு, குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து, உபகரணங்கள் விநியோகம் செய்யப்பட்ட திருவாளர்கள். ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள 0.52% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே உபகரணங்களை கொள்முதல் செய்துகொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 9,50,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர், "திருவாளர்கள். ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி" என்ற நிறுவனத்தாரிடம் சம்மத கடிதம் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.
4. கேட்பு தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1969 / 2018 / இ1)**

**பொருள் எண்–28**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம், ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-2019ன் கீழ், கீழ்க்காணும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 22866/P3/2018 நாள். 23.08.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு இந்நகராட்சியில் 04.10.2018 ஆம் தேதியன்று மின்னனு முறையில் (E-Tendering) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்காணும் பட்டியலின்படி வரிசை எண். 01ல் காணும் ***M/s. A.R. CONSTRUCTIONS,*** Gangavalli (Tk.), Salem (Dt.) என்ற நிறுவனத்தார் மட்டுமே தொழில் நுட்ப அறிக்கையில் தகுதி பெற்றுள்ளார். வரிசை எண். 02ல் காணும் ***M/s. K.S. CONSTRUCTIONS,*** Keeripatti, Salem-636107 என்ற நிறுவனத்தார் தொழில்நுட்ப அறிக்கையில் தகுதி பெறாமல் உள்ளனர். எனவே, தொழில்நுட்ப அறிக்கையில் தகுதி பெற்றுள்ள ***M/s. A.R. CONSTRUCTIONS,*** Gangavalli (Tk.), Salem (Dt.) என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகித உறையினை 17.10.2018 அன்று திறந்து பரிசீலிக்கப்பட்டதில், மதிப்பீட்டைவிட 5.01% கூடுதலான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | தொழில்நுட்ப தகுதி | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான துருகம் சாலையில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை Bio Mining முறையில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பணி | ரூ. 175.00 | ***M/s. A.R. CONSTRUCTIONS,*** 727, Chettikulam, Naduvalur Post, Gangavalli (Tk.), Salem (Dt.) | **தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டுள்ளது** | **5.01 % மதிப்பீட்டிற்கும் அதிகம்** |
| | | | ***M/s. K.S. CONSTRUCTIONS.,*** 2/33-A, Palani Andavar Kovil Street, Keeripatti, Salem-636107 | தொழில்நுட்ப தகுதி பெறவில்லை | -- |

மேற்காணும் பணிக்கு, மதிப்பீட்டைவிட + 5.01% கூடுதலான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள "***M/s. A.R. CONSTRUCTIONS,*** 727, Chettikulam, Naduvalur Post, Gangavalli (Tk.), Salem (Dt.)" என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதால், L1 ஒப்பந்ததாரராக கருதி, விலைக்குறைப்பு செய்துதர 17.10.2018 அன்று கோரியதில், 18.10.2018 அன்று ஒப்பந்ததரார் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள தொழிலாளர்களின் கூலி மற்றும் வாகன எரிபொருள் கடும் விலையேற்றத்தின் காரணமாகவும், **+5.01%**-லிருந்து **+4.96%**-க்கு குறைத்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். இதற்கு குறைவாக குறைத்துதர இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி **+4.96%**-க்கு மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) அளித்துள்ள, "***M/s. A.R. CONSTRUCTIONS,*** 727, Chettikulam, Naduvalur Post, Gangavalli (Tk.), Salem (Dt.)" என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. "***M/s. A.R. CONSTRUCTIONS,*** 727, Chettikulam, Naduvalur Post, Gangavalli (Tk.), Salem (Dt.)" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) விலை விகிதம் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.96%** என்ற விலைவிகிதத்தினை திட்டப்பணியின் அவசர, அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று உறுதிமொழி கடிதம் (LOA) வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2220 / 2018 / இ1 )**

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**